செ.வெ.எண்: 890/2016 நாள்: 19.12.2016

# பத்திரிக்கைச் செய்தி:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள விளம்பர பலகைகள் மற்றும் பிளக்ஸ் போர்டுகளை அகற்றுவதற்கு தொடர்புடைய அனைத்து உள்ளாட்சி அமைப்புகள் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இப்பொருள் தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட மாவட்ட பிரநிதிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்சிகள் சார்பாக வைக்கப்படும் அனைத்து பிளக்ஸ் போர்டுகள் மற்றும் விளம்பர பலகைகளுக்கு மாவட்ட ஆட்சியரின் முறையான அனுமதி பெற்று வைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அனுமதி பெறாமல் வைக்கப்பட்டுள்ள அனைத்து கட்சி சார்பான பிளக்ஸ் போர்டுகள் மற்றும் விளம்பரங்களையும் உடனடியாக பொதுமக்களுக்கு எந்தொரு இடையூர்கள் இல்லாமல் அப்புறப்படுத்திட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்டத்தின் பல இடங்களில் இரவு நேரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் முறையான அனுமதி பெறாமல் தனியார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது மக்களால் பிளக்ஸ் போர்டுகள் மற்றும் விளம்பர பலகைகள் வைக்கப்படுவதாக மாவட்ட நிர்வாகத்திற்கு தொடர்ந்து புகார் வந்த வண்ணம் உள்ளன.

எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முறையான அனுமதி பெறாமல் பொது இடங்களில் அழகைக் குலைக்கும் வகையில் அரசியல் கட்சியினர், தனியார் நிறுவனங்கள் கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது மக்களால் பிளக்ஸ் போர்டுகள், தட்டிகள், விளம்பரப்பலகைகள், சுவர் விளம்பரம், போன்ற அனைத்து வகையான விளம்பரங்களும் செய்வதை கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும்மென கேட்டுக் கொள்கிறேன். மேலும் மேற்காணும் தற்காலிக விளம்பர பலகைகள் வைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி பெறுவதற்கான வழிமுறைகள் அரசாணை எண் : 175 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 16.11.2011-ல் மிக தெளிவாக தெரிவிக்கப்பட்டள்ளது. மேற்காணும் அரசாணையில் விண்ணப்பம் படிவம் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் விண்ணப்பம் படிவம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வளர்ச்சிப் பிரிவு, அனைத்து நகராட்சி அலுவலங்கள் மற்றும் அனைத்து பேரூராட்சிகள் அலுவலங்களில் கிடைக்கும். மேலும் தற்காலிக விளம்பர பலகை வைக்க அனுமதி கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில்

விண்ணப்பிக்கும் பொழுது அரசாணையில் தெரிவித்துள்ளவாறு கீழ்க்காணும் நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

1. தனியார் இடங்களில் வைக்கப்படும் விளம்பரங்களுக்கு தொடர்புடைய நிலத்தின் உரிமையாளரிடம் இருந்து மேற்காணும் விளம்பர பலகை வைப்பதற்கு தனக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை என்ற தடையில்லாச் சான்று இணைக்கப்பட வேண்டும்.

2. உள்ளாட்சி துறை மற்றும் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இடங்களில் விளம்பர பலகை வைக்க சம்மந்தப்பட்ட துறையிடமிருந்து மேற்காணும் விளம்பர பலகை வைக்க ஆட்சேபனை இல்லை என்ற தடையில்லாச் சான்று இணைக்கப்பட வேண்டும்.

3. விளம்பர பலகை நிறுவப்படும் பகுதிக்கு உட்பட்ட காவல் துறையிடமிருந்து (ஆய்வாளர் நிலைக்கு குறையாத அலுவலர்) விளம்பர பலகை வைக்க ஆட்சேபினை இல்லை என்ற தடையில்லாச் சான்று இணைக்கப்பட வேண்டும்.

4. விளம்பர பலகை நிறுவப்படும் இடம், சாலையின் அளவு, விளம்பர பலகையின் அளவு, விளம்பர பலகை அமைப்படும் உயரத்தின் அளவு, விளம்பர பலகை வைக்கப்படும் தூண்களின் தரம் மற்றும் விளம்பர பலகையில் குறிப்பிடபடும் வாசகம் அடங்கிய வரைப்படம் (Topo sketch) இணைக்கப்பட வேண்டும்.

5. அரசாணையில் தெரிவித்துள்ளவாறு ஒரு விளம்பர பலகைக்கான அனுமதி கட்டணம் மற்றும் அதற்கான திரும்ப பெறும் வைப்பு தொகையும் சேர்ந்து தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளில் செலுத்தி அதன் விவரம் இணைக்கப்பட வேண்டும்.

மேற்காணும் அனைத்து ஆவணங்களுடன் விண்ணப்பத்தினை முழுமையாக பூர்த்தி செய்து விளம்பர பலகை நிறுவப்படும் தேதிக்கு 15 தினங்களுக்கு முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வளர்ச்சிப் பிரிவில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று வைக்கப்படும் பிளக்ஸ் போர்டுகள் மற்றும் விளம்பர பலகைகளின் மீது மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி எண் மற்றும் அனுமதி வழங்கிய நாள் கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். எனவே, அரசியல் கட்சியினர், தனியார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது

மக்கள் மேற்காணும் விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சியரின் முறையான அனுமதி பெறாமல் விளம்பர பலகைகள் மற்றும் பிளக்ஸ் போர்டுகள் வைக்கக் கூடாது என்றும் இதனை மீறி விளம்பர பலகைகள் மற்றும் பிளக்ஸ் போர்டுகள் வைப்பவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

(ஓம்/-) சஜ்ஜன்சிங் ரா. சவான்,
மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்.

/உண்மை நகல் / உத்தரவுப்படி/

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வ),
கன்னியாகுமரி மாவட்டம்.

---------------------------------------------------------------------------------------------------------------

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.